பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 25 | வியாழக்கிழமை | 08.02.2024 | அதிர்வு 191

## மாணவனின் உயிரை பலியெடுத்த விபத்து!

மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து மித்தெனிய – வலஸ்முல்ல பிரதான வீதியில் நேற்று இடம்பெற்றுள்ளது. 06



### ரணிலை மறைமுகமாகப் புகழ்ந்து

# சஜித் கட்சிக்கு எதிராக அதிரடி காட்டிய ராஜித

### ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையையும் புறக்கணிக்கவில்லை

**"அழிவடைந்த நாடு தற்போது உயிர் பெற்றுள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். சந்திரிகாவின் 'வெள்ளை அலரி' அமைதி மாநாட்டுக்குச் சென்றவர்கள், மஹிந்தவின் இனவாத செயற்பாட்டுக்கும் சென்றார்கள். அவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. எனக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியால் ஏன் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.? கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக நான் செயற்படவில்லை."**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.** 06

# அரசியல் கட்சிகளுக்கு மைத்திரி அழைப்பு



"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என அழைப்பு விடுகின்றேன். நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டங்கள் எம்மிடம் உள்ளன."

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

"பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதை 06



## ஜனாதிபதியின் கீழ் சுற்றாடல் அமைச்சு

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

சுற்றாடல் துறை அமைச்சை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொறுப்பின் கீழ் கொண்டுவருவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் 06




முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட வரவு – செலவுத் திட்ட நிதியை எப்படிப் பங்கிட்டுச் செலவு செய்வது என்ற சர்ச்சை அரச நிர்வாகக் கட்டமைப்புக்குள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாக அறிய வருகின்றது.

வரவு – செலவுத் திட்டத்தில் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுக் கிடைக்கும் நிதியை மாவட்டத்தில் எத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களோ அதற்கேற்ப 06



# ஜனாதிபதியின் உரையினை புறக்கணித்து வெளிநடப்பு செய்த உறுப்பினர்கள் விவரம்

ஜனாதிபதிநேற்றுநாடாளுமன்றகூட்டத்தொடரைஆரம்பித்து உரையாற்றத் தொடங்கிய சந்தர்ப்பத்தில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சிலர் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

அண்மைக்காலமாக அரசாங்கம் மேற்கொண்ட சில நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறினாலும், ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக நாடாளுமன்றத்திற்கு தெரிவான ராஜித்த சேனாரத்ன, பாட்டலி சம்பிக்க ரணவக்க, ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இஷாக் ரஹ்மான், ஏ.எச்.எம். பௌஸி, சுயாதீன உறுப்பினராக செயற்படும் குமார வெல்கம ஆகியோர் தொடர்ந்தும் சபையில் இருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் ஆகியோர் வெளிநாடு சென்றுள்ள நிலையில், கலாநிதி ஹரினி அமரசூரிய ஜனாதிபதி உரையாற்றியபோது சபையில் பிரசன்னமாகியிருந்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் தவராசா கலையரசன் ஆகியோர் மாத்திரமே சபையில் இருந்தனர்.

# பொலிஸ் நிலையத்தில் வைத்தே இரு சந்தேக நபர்களுக்கு நஞ்சு

## கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருவில் சம்பவம்

ஜிந்துப்பிட்டி துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் சந்தேக நபர்கள் இருவருக்கு பொலிஸ் நிலையத்தில் வைத்தே நஞ்சு கலந்த பால் வழங்கப்பட்டுள்ளது

கொழும்பு, ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் இருவர் இனந்தெரியாத நபர் ஒருவர் வழங்கிய கடும் நஞ்சு கலந்த பால் பொதிகளை அருந்தி ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற ஜிந்துப்பிட்டிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் என அடையாளம் காணப்பட்ட நபர், அதற்கான புலனாய்வு தகவல் வழங்கிய நபர் ஆகியோரே இவ்வாறு ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று நண்பகல் அடையாளம் தெரியாத நபர் ஒருவர் பொலிஸ் தடுப்புக் கூண்டின் அருகே வந்து கைதிகள் இருவருக்கும் இரண்டு பாக்கெட் பால் கொடுத்துள்ளார்.

அதனை அருந்தியவுடன் கைதிகளில் ஒருவர் உடனடியாக மயங்கி வீழ்ந்துள்ளார். சற்று நேரத்தில் மற்றவரும் மயங்கி வீழ்ந்துள்ளார்.

அதனையடுத்து உடனடியாக நடவடிக்கை எடுத்த பொலிஸார் சந்தேகநபர்கள் இருவரையும் தேசிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். அவர்கள் தற்போது தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பால் பாக்கெட்டுகளை கொண்டு வந்தவர் எனக் கூறப்படும் நபர் குறித்த தகவல் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஜிந்துப்பிட்டி துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் சந்தேக நபர்கள் இருவருக்கு பொலிஸ் நிலையத்தில் வைத்தே நஞ்சு கலந்த பால் வழங்கப்பட்டுள்ளது





# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

இந்த மாதத்தின் முதல் நான்கு நாள்களில் 28 ஆயிரத்து 493 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, சராசரியாக நாளொன்றில் 7 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2023 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்கு மொத்தமாக 1 லட்சத்து 7 ஆயிரத்து 639 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்திருந்தனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில், இந்த மாதத்தின் முதல் நான்கு நாள்களில் ரஷ்யாவிலிருந்து 4 ஆயிரத்து 279 பேரும் இந்தியாவிருந்து 4 ஆயிரத்து 23 பேரும் சுற்றுலா மேற்கொண்டு நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அவ்வாறே, பிரித்தானியாவிலிருந்து 2 ஆயிரத்து 592 பேரும், ஜேர்மனியிலிருந்து 1,977 பேரும், சீனாவிலிருந்து 1,950 பேரும் இந்த காலப்பகுதியில் நாட்டுக்கு சுற்றுலா வந்துள்ளனர்.




# விஷ வாயுவை சுவாசித்த மீனவர் ஒருவர் உயிரிழப்பு

## எழுவர் வைத்தியசாலையில் அனுமதி

துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகொன்றின் மீன் சேகரிப்பு தொட்டிக்குள் உருவாகியதாகக் கூறப்படும் விஷ வாயுவை சுவாசித்ததில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அம்பலாங்கொடை மீன்பிடித் துறைமுகத்திலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், விஷ வாயுவால் பாதிக்கப்பட்ட 8 மீனவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து ஏனைய 7 மீனவர்களும் பலபிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



# ஓட்டோ குத்தகைப் பணத்தை செலுத்த முடியாமல் மனமுடைந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிர்மாய்ப்பு!

ஓட்டோவின் குத்தகைப் பணத்தைச் செலுத்த முடியாமல் மனமுடைந்த நான்கு பிள்ளைகளின் தந்தை உயிர்மாய்த்துள்ளார்.

இந்தச் சோக சம்பவம் கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

கண்டி, மஹய்யாவ பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய எஸ். பிரியங்கர என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே வீட்டில் தூக்குப்போட்டு உயிரை மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு மகள்கள் மற்றும் இரண்டு மகன்களின் தந்தையான இவர் கடந்த சில வாரங்களுக்கு முன்பு உயிரை மாய்க்க முயன்றுள்ளமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இறந்தவரின் மனைவி மத்திய கிழக்கில் பணிபுரிந்து கடந்த டிசம்பர் மாதம் நாட்டுக்கு வந்திருந்தார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

5 இலட்சம் ரூபா நிலுவைத் தொகையாக இருந்த குத்தகைப் பணத்தை (லீசிங்) செலுத்த முடியாத காரணத்தால் அவரது ஓட்டோவை எடுத்துச் செல்லவுள்ளதாக நிறுவனத்தினர் எச்சரித்திருந்தனர் என்றும் மரண விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

சடலம் மீதான பிரேத பரிசோதனை கண்டி தேசிய வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி சாதிக் சித்தீக்கினால் நடத்தப்பட்டுள்ளது.

முன்வைக்கப்பட்ட மருத்துவ அறிக்கைகள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் கண்டி தேசிய வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி டபிள்யூ.எம்.பி.விஜேகோன் இது உயிர்மாய்ப்பு எனத் தீர்மானித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# தம்பதியினரைத் தாக்கிக் கார் கொள்ளை

## சில மணி நேரத்துக்குள் 8 பேர் மடக்கிப் பிடிப்பு

கம்பஹா – யக்கல பிரதேசத்தில் காரில் இருந்து பானம் அருந்திக்கொண்டிருந்த இளம் தம்பதியினரைக் கூரிய ஆயுதங்களால் தாக்கி அவர்களது காரைக் கொள்ளையிட்டுச் சென்ற 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற சில மணி நேரத்துக்குள் சந்தேகநபர்கள் மக்கனிகொட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் கொள்ளைச் சம்பவத்துக்காகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் வானும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கலகெடிஹென பிரதேசத்தில் வசிக்கும் தம்பதியினர் கம்பஹா – மஹாவிட பிரதேசத்தில் உள்ள பானம் விற்பனை நிலையம் ஒன்றுக்கு அருகில் இருந்து பானம் அருந்திக் கொண்டிருந்தபோது வானில் வந்த சந்தேகநபர்கள் சிலர் மேற்படி தம்பதியினரைக் கூரிய ஆயுதங்களால் தாக்கிவிட்டு அவர்களது காரைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்கள் சாரதியின் மனைவியின் கைத்தொலைபேசியைச் சேதப்படுத்தியுள்ளனர் என்று தெரிவித்த பொலிஸார், குறித்த காரின் ஜி.பி.எஸ். கைத்தொலைபேசியில் இருக்கலாம் எனச் சந்தேகித்து அவர்கள் அதனைச் சேதப்படுத்தியிருக்கலாம் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

எவ்வாறிருப்பினும் குறித்த காரின் ஜி.பி.எஸ். சாரதியின் கைத்தொலைபேசியில் இருந்ததால் இது தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



# கொக்குவிலில் டெங்கு பரவ இடமளித்தனராம் ஏழு பேருக்கு தலா 20 ஆயிரம் ரூபா அபராதம்!

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட கொக்குவில் பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் அண்மைக்காலமாக அதிகளவில் ஆட்கொல்லி நோயான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். இதனையடுத்து கொக்குவில் பொது சுகாதார பரிசோதகரால் தொடர்ச்சியான விழிப்புணர்வு நடவடிக்கைகளும், சுற்றாடலை நுளம்பு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆயினும் இந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றாது தொடர்ச்சியாக நுளம்பு பெருகும் சூழலுடன் சுற்றாடலை வைத்திருந்த உரிமையாளர்கள் 07 பேர், கொக்குவில் பொது சுகாதார பரசோதகரின் பரிசோதனையில் சிக்கி கொண்டனர்.

இவர்களுக்குகெதிராக மேலதிக நீதிவான் நீதிமன்றில் தனித்தனியே வழக்குகள் கொக்குவில் பொது சுகாதார பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்டன. வழக்குகள் நேற்றைய தினம் 07 வழக்குகளும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. எதிராளிகள் அனைவரும் குற்றச்சாட்டுகளை ஏற்று கொண்டதையடுத்து 07 பேருக்கும் தலா இருபதாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டு கடுமையான எச்சரிக்கையும் நீதிமன்றால் வழங்கப்பட்டது.



# அம்பாறை மாவட்ட விவசாயிகள் நேற்று செயலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பெரும்போக வேளாண்மை அறுவடையைத் தொடர்ந்து தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள் குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்வதால் தாம் மிகுந்த நஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும், அரசாங்கம் கிலோ நெல்லின் விலையை 130 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் எனவும் கோரி பதாதைகளுடன் அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு முன்னால் விவசாயிகு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



அத்துடன் அண்மையில் ஏற்பட்ட வெள்ள நிலமையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈட்டினையும் பெற்றுத் தர வேண்டும் எனவும் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமனாகப் பங்கிட்டு, அவர்களின் இசைவோடு திட்டங்களை தெரிவு செய்யுமாறு ஜனாதிபதியினால் வாய்மொழி மூலமும் –

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பூரண ஒத்துழைப்புடன் நிறைவேற்றுமாறு சுற்று நிருபம் மூலமும் –

அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதிக்கான திட்டங்களை மாவட்ட ருங்கிணைப்புக் குழுத் தலைவர் காதர் மஸ்தான் தன்னிச்சையாகத் தேர்வு செய்து முடிவு செய்திருக்கின்றமையால் குழப்பம் நிலவுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவு திட்ட நிதியில் வன்னித் தேர்தல் மாவட்டத்தின் கீழ் உள்ள மூன்று நிர்வாக மாவட்டங்களுக்கும் தலா 11 கோடி ஐம்பது லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய இரு மாவட்ட அபிவிருத்தி நிதியை எப்படிச் செலவிடுவது என்பது தொடர்பில் அபிவிருத்திக் குழுவின் தலைவர் காதர் மஸ்தான் எதேச்சையாக முழுமையான திட்டங்களையும் தேர்வு செய்துள்ளார். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனை ஏற்க முடியாது எனத் தெரிவித்து வருகின்றனர். இதனால் மாவட்ட செயலக அதிகாரிகள் நெருக்கடியை எதிர்கொண்டு திண்டாடுகின்றனர்.

இது தொடர்பாக மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படும் கடும் ஆட்சேபனையையும் எதிர்ப்பையும் சமாளிப்பதற்காக, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் கிராம மட்ட சந்திப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. அங்கு சம்பந்தப்பட்டோரைக் கூட்டி, விடயங்களை நேரடியாக ஆராய்ந்து, திட்டங்களை முடிவு செய்ய முஸ்தீபுகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால், அதனைத் தடுக்கும் வகையில் இரு மாவட்ட அரச அதிபர்களையும் நாளை (வெள்ளிக் கிழமை) சந்திக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தனா அழைத்துள்ளார்.

இந்த நிலையில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் முடிவை அதிகாரிகள் மீது திணிக்கும் வகையில் நாளை காலை 10 மணிக்கு நாடாளுமன்றக் கட்டிடத்தில் இந்த விசேட கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டு, அக்கலந்துரையாடலிற்கு மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்களும் அழைக்கப்பட்டுள்ளனர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இக் கலந்துரையாடலுக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்காவும், காதர் மஸ்தானும் அழைக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் தெரியவருகின்றது.

தேர்தல் நெருங்கும் சமயத்தில் இப்படி மாவட்டத்தின் எம்.பிக்களை அதிருப்திக்கு உள்ளாக்குவது ஆட்சியாளரான ரணிலுக்கு உசிதமான விளைவுகளைத் தராது என்பது மட்டும் நிச்சயம்.

## அரசியல் கட்சிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2022 ஆம் ஆண்டு முதல் வலியுறுத்து கின்றோம். சர்வகட்சி அரசை அமைப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் உண்மைத் தன்மையுடன் நடவடிக்கைகளை முன்னெடுத்தார்கள். எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால் அந்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

நாட்டின் பொருளாதார நிலை ஸ்திரமடைந்துள்ளது. ஆனால், சமூகக் கட்டமைப்பு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சமூகக் கட்டமைப்பை நெருக்கடிக்குள்ளாக்கி எதனையும் சாதிக்க முடியாது. நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று அனைவருக்கும் அழைப்பு விடுகின்றேன். நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டங்கள் எம்மிடம் உள்ளன." – என்றார்.

## சஜித் கட்சிக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரை நேற்று ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கொள்கை விளக்க உரை யாற்றினார். இந்த உரையை ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் புறக்கணித்து, ஜனாதிபதி சபைக்கு வந்தவுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சபையில் இருந்து வெளியேறினார்கள். ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன, பாட்டலி சம்பிக்க ரணவக்க, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இஷாக் ரஹ்மான், ஏ.எச்.எம். பௌஸி, குமார வெல்கம ஆகியோர் சபையில் இருந்து வெளியேறவில்லை.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ராஜித சேனாரத்ன எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:–

"ஜனாதிபதிகளின் கொள்கை விளக்க உரையை நான் ஒருபோதும் புறக்கணிக்கவில்லை. அதனை அரசியல் கலாசாரமாகக் கடைப்பிடிக்கின்றேன். அழிவடைந்த நாடு தற்போது உயிர் பெற்றுள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தற்போதைய முன்னேற்றத்தைச் சீர்குலைக்க நான் விரும்பவில்லை.

முதலில் நாடு, இரண்டாவது அரசியல் கட்சி என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு நான் செயற்படுவேன். கடந்த காலங்களிலும் அவ்வாறே செயற்பட்டுள்ளேன். கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக நான் செயற்படவில்லை. அவ்வாறான நிலையில் எனக்கு எதிராக எவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியும்.?

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் "வெள்ளை அலரி" அமைதி மாநாட்டுக்குச்சென்றவர்கள்,மஹிந்தவின்இனவாதச் செயற்பாடுகளுக்குச் சென்றார்கள். அவர்கள் தற்போது எதிரணியில் உள்ளார்கள். இவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை." – என்றார்.

## மாணவனின் உயிரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

மேற்படி மாணவன் தனது 2 நண்பர்களுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது, குறித்த மோட்டார் சைக்கிள் வீதிக்கு அருகாமையில் இருந்த மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த ஏனைய இருவரும் எம்பிலிப்பிட்டிய பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் வலஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய மாணவனே உயிரிழந்துள்ளார்.

## ஜனாதிபதியின் கீழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளர் எம்.எஸ்.பி ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் இந்த அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியாகியுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் கலந்துரையாடப்பட்டதன் பின்னர், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சரும் பின்னாள் சுற்றாடல் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல கைது செய்யப்பட்ட நிலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் அவர் தனது சுற்றாடல் துறை அமைச்சுப் பதவியில் இருந்து நேற்றுமுன்தினம் விலகினார்.

இதனால், அவர் வகித்த சுற்றாடல் துறை அமைச்சுப் பதவி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.







# ராஜபக்ஷக்களையும் விட ரணிலின் ஆட்சியில் தமிழர் விரோத நடவடிக்கைகள் மிகத் தீவிரம்!

## அமெ. காங்கிரஸ் உறுப்பினர்களுடனான சந்திப்பில் கஜேந்திரகுமார்

(எஸ்.நிதர்ஷன், வசந்தன்)

இன்றைக்குப் போர் முடிந்த பிற்பாடு தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகள் மிகத் தீவிரமாக அதிகரித்திருக்கின்றன. ராஜபக்ஷ தரப்பு தமிழர்களுக்கு எதிராக மிகத் தீவிரமான செயற்பாடுகளில் முன்னர் இறங்கி இருந்தது. ஆனால் இன்றைக்கு ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் நடைபெறுகின்ற செயற்பாடுகளைப் பார்த்தால் அவை ராஜபக்ஷ காலத்தில் இடம்பெற்றவற்றை விட மிக மோசமாக அமைந்துள்ளன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்காவில் அமெரிக்கா காங்கிரஸ் உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கு சென்றுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அங்கு இராஜதந்திர சந்திப்புக்களில் ஈடுபட்டுள்ளார்.

அந்தவகையில் அமெரிக்கா நாடாளுமன்றத்தில் தமிழர் விவகாரங்களில் அக்கறை செலுத்தி செயற்பட்டு வரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களான விலே நிக்கல், டொபரஞ் ரோஸ், ஜெமி ரஸ்கின், டனி கே டேவிஸ் ஆகியோருடன் வர்சந்திப்புக்களைமேற்கொண்டிருந்தார்.

இவர்கள் நால்வரும் தமிழர் விவகாரங்களில் அதிக அக்கறை செலுத்தியவர்கள். அமெரிக்கா காங்கிரஸ் பாராளுமன்றத்தில் தமிழர் தேசம் தொடர்பாக பல தீர்மானங்களை நிறைவேற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சந்திப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களை சந்தித்து இருந்தேன். இந்த நான்கு பேரும் தமிழர் விவகாரங்களில் தீவிரமாக அக்கறை செலுத்துகிறவர்கள். இதில் குறிப்பாக மூவர் 'தீர்மானம் 427' ஐ நாடாளுமன்றத்தில் நிறைவேற்றக் காரணமாக இருந்தவர்கள்.

குறிப்பாக நல்லிணக்கத்தையும் பொறுப்பு கூறலையும் வலியுறுத்தித்தான் இது நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்த வகையில் அவர்களுடனான சந்திப்பின் போது நாங்கள் முக்கியமாக சில விடயங்களை முன்வைத்திருந்தோம்.

இன்றைக்கு போர் முடிந்த பிற்பாடு தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகள் மிக தீவிரமாக அதிகரித்திருக்கின்றன. ராஜபக்ஷ தரப்பு தமிழர்களுக்கு எதிராக மிகத் தீவிரமான செயற்பாடுகளில் முன்னர் இறங்கி இருந்தது.

ஆனால் இன்றைக்கு ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் நடை

(09ஆம் பக்கம் பார்க்க)





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வெற்று வேட்டு அறிவிப்புகள்

தாம் ஜனாதிபதிப் பதவிக்கு வந்த நாளிலிருந்து - கடந்த ஒன்றரை வருடங்களாக - அவ்வப்போது வெறும் பலூன்களைப் பறக்க விடுவது போல தேவையில்லாத - அர்த்தமற்ற - பயனற்ற - அறிவிப்புகளை விடுத்து, அரசியல் குழப்பங்களை வீணாகக் கிளப்பி வருகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று இப்பத்தியில் பலதடவைகள் சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம்.

கடந்த ஆண்டு நாட்டின் 75 ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட இருக்கையில், தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவை அந்த சுதந்திர தினத்திற்கு முன்னர் காணப்போகின்றேன் என்று இரண்டு, மூன்று மாதங்கள் முன்னதாக ஓர் அறிவிப்பை விடுத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. கடைசியில் விவகாரம் புஸ்வாணம் ஆனது.

அதுபோல இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சர்வ கட்சிக் கூட்டம், அரசமைப்பின் 13ஆம் திருத்த நடைமுறையாக்கம் பற்றி எல்லாம் அவ்வப்போது புதுது, புதிதாக பலூன்களை பறக்க விட்டு, அரசியல் அதிர்வுகளை ஏற்படுத்திவிட்டு, அடங்கிப் போய் விடுவது அவரது அரசியல் போக்காகி உள்ளது.

'பச்சைத் தண்ணீரில் பலகாரம் சுடுவது போல' பல விடயங்களில் அறிவிப்புக்களை வெளியிட்டு, அத்தோடு அடங்கிப் போவது ரணிலின் பாணி என்று கூறும் அளவுக்கு நிலைமை போயிருக்கின்றது.

அந்த வரிசையில் புதிய விடயம் ஒன்று பற்றிய புஸ்வாண அறிவிப்புக் குறித்து இப்போது தகவல் வெளியாகி உள்ளது.

பலஸ்தீனத்தின் காசா மீது இஸ்ரேல் தொடுத்திருக்கும் சியோனிஸ பயங்கரவாதம் உலகெங்கும் கடும் கண்டனங்களையும் சினத்தையும் சீற்றத்தையும் ஏற்படுத்தியிருப்பது தெரிந்த விடயம்தான். அதுவும் இலங்கையில் நமது சகோதர சிறுபான்மையினரான முஸ்லிம்கள் மத்தியில் கடும் கொதிப்பை இஸ்ரேலின் இந்தப் பயங்கரவாதக் கொடூரம் ஏற்படுத்தியிருக்கின்றது.

காசா மீதான இஸ்ரேலின் இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் நிறுத்தப்படாவிட்டால் செங்கடல் ஊடாக இஸ்ரேலுக்கு மேற்கொள்ளப்படும் விநியோகம் தடுக்கப்படும் என்று ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அறிவித்திருக்கின்றனர். செங்கடல் வழியாகப் பயணிக்கும் இஸ்ரேல் ஆதரவுத் தரப்புக்களின் கப்பல்கள் இலக்கு வைக்கப்படும் என அறிவித்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அந்தத் தாக்குதலை ஆரம்பித்தும் விட்டனர்.

இதனை அடுத்து, செங்கடல் ஊடான கப்பல் சேவையை பாதுகாப்பதற்காக அமெரிக்க தலைமையில் 'செழிப்பை பாதுகாக்கும் ஒப்ரேஷன்' என்ற பெயரில் கடல் பாதுகாப்பு நடவடிக்கை தொடங்கப்பட்டு விட்டது.

அமெரிக்கா தலைமையில் முன்னெடுக்கப்படும் இந்தக் கடற்படை நடவடிக்கையில் இலங்கை கடற்படையினருடன் இலங்கைக் கடற்படைக் கப்பல்களும் பங்குபற்றும் என்று ஓர் அறிவிப்பை திடுதிப்பென வெளியிட்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. வழமைப் போல அதுவும் வெற்று அறிவிப்பு - பலனற்ற வெறும் பலூன் பறப்பு - என்பது இப்போது உறுதியாக இருக்கின்றது.

இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்களின் ஆன்மாவையே சீண்டும் விதத்தில் இந்த அறிவிப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட போதே அதற்குக் கனதியான எதிர்ப்புப் பீறிட்டுக் கிளம்பியது.

ஜனாதிபதி அறிவிப்பு விடுத்து ஒரு மாதம் கடந்தும் செங்கடல் படை நடவடிக்கையில் கலந்து கொள்வதற்குத் தனது படைகளை அனுப்பி வைக்கும் ஏற்பாடுகளை இலங்கைக் கடற்படை இன்னுமே தொடங்கவில்லை என அறிய வந்தது.

விசாரித்துப் பார்த்தால், கடற்கலங்களுக்கு எதிரான ஏவுகணைகள் தாராளமாகப் பல பக்கங்களாலும் பயன்படுத்தப்படும் செங்கடல் பகுதியில் பயணிக்க கூடிய பாதுகாப்பு தகுதி நிலையில் இலங்கைக் கடற்படையில் ஒரு படகு கூட இல்லை என்ற உண்மை அம்பலத்துக்கு வந்துள்ளது.

யேமனைத் தளமாகக் கொண்ட ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் பகுதியில் நடத்தும் ஏவுகணை தாக்குதல்களை எதிர்கொள்ளக்கூடிய வசதியான கடற்கலங்கள் இலங்கைக் கடற்படையிடம் இப்போது இல்லை.

போருக்குப் பிந்திய இலங்கைக் கடற்படையின் வலிமை இவ்வளவுதான் என்று இப்போது பாதுகாப்பு வட்டாரங்கள் சித்திரிக்கின்றன.

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவும் ஏவுகணைகளை அமெரிக்கக் கப்பல்கள் சுமார் ஒரு மைல் தூரத்தில் வைத்து சுட்டு விழுத்தும் வல்லமை கொண்டவையாக உள்ளன. அத்தகைய வலிமை இல்லாத இலங்கைக் கடற்படை கப்பல்கள் செங்கடல் பாதுகாப்புப் பணிக்குச் செல்வது வீண் அழிவு வேலை என்று சுட்டப்படுகின்றது.

செங்கடல் பாதுகாப்பு பணிக்குச் செல்லும் தகைமை இலங்கைக் கடற்படை கொண்டிராத நிலையில் வழமைபோல தேவையற்ற அறிவிப்பு ஒன்றை விடுத்து, அநாவசிய பலூன் ஒன்றை பறக்க விட்டு, பல தரப்புகளினதும் சீற்றத்தை - கண்டனத்தை - விமர்சனத்தை - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாங்கிக் கட்டிக் கொள்வதுதான் மிச்சம்...!

# நீலகிரியில் கட்டுமானம் இடிந்து விபத்து மண்ணில் புதையுண்டு 6 பெண்கள் பலி





உதகை லவ்டேல் பகுதியில் இடம்பெற்ற கட்டுமான பணியின் போது, அருகில் இருந்த கழிப்பிடம் இடிந்து விழுந்ததில் மண்ணில் புதைந்து 6 பெண்கள் உயிரிழந்துள் ளனர்.

நீலகிரி மாவட்டம் உதகை லவ்டேல் பகுதியில் தேயிலை தோட்டத்தில் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

இந்த கட்டடத்தை அண்மித்து பயன்படுத்தப்படாத பொது கழிப்பிடம் இருந்துள்ளது.

இந்த நிலையில், நேற்று தடுப்பு சுவர் கட்டும் பணியில் 10 ஊழியர்கள் ஈடுபட்டனர். அப்போது பள்ளம் தோண்டும் போது திடீரென கழிப்பிட கட்டடம் எதிர்பாராத விதமாக தொழி லாளர்கள் மீது விழுந்துள்ளது.

இதில் தொழிலாளர்கள் இடிபாடுகளில் புதைந்த னர். தொழிலாளர்கள் அலறல் கேட்டு அருகிலிருந்தவர்கள் உடனடியாக பொலிஸார் மற்றும் தீயணைப்பு துறையினருக்கு தகவல் அளித்தனர்.

தீயணைப்புத்துறையினர் உடனடியாக மீட்பு பணியில் ஈடுபட்டனர். உடனடியாக ஒரு ஆண் உட்பட 7 பெண்கள் மீட்கப்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் பட்டனர். இதில், சங்கீதா (வயது 35), ஷகீலா (வயது 30), பாக்யா (வயது 36), உமா (வயது 35), முத்துலட்சுமி (வயது 36), ராதா (வயது 38) ஆகிய 6 பெண்கள் உயிரிழந்தனர்.

இறந்தவர்கள் அனைவரும் உதகை காந்திநகரை சேர்ந்த வர்கள் என்று சொல்லப்படுகிறது. மேலும், மீட்கப்பட்ட இரு பெண்கள் மற்றும் ஒரு ஆண் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.




# விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் மதுரையில் போட்டியிடுவதற்கு திட்டம்

மறைந்த தே.மு.மு.க. தலைவர் விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் மதுரையில் போட்டியிட வாய்ப்புள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைக்க தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதாவுக்கு தென் மாவட்டச் செயலாளர்கள் நெருக்கடி கொடுக்கத் தொடங்கி உள்ளனர்.

அதேநேரம் கட்சிக்கு புத்துயிர் ஊட்டவும் தொண்டர்களை உற்சாகப்படுத்தவும் விஜயகாந்த் மகன் விஜயபிரபாகரனை மதுரையில் போட்டியிட வைக்கும் முடிவில் பிரேமலதா இருகின் றார் என கூறப்படுகிறது.

விஜயகாந்த் மறைவுக்கு பின்னர் தே.மு.தி.கவுக்கு மக்கள் மத்தியில் அனுதாபம் ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் அதைத் தங்களுக்கு சாதகமாக்கும் எதிர்பார்ப்பில் அ.தி.மு.க, தே.மு.தி.கவை தங்கள் கூட்டணியில் சேர்த்துக் கொள்ள முயற்சி செய்து வருகிறது.

ஆனால், தே.மு.தி.க. தற்போது வரை பிடிகொடுக்காமல் பா.ஜ.கவுடன் மறைமுகமாக பேச்சுவார்த்தை நடத்தி வருவதா கக் கூறப்படுகிறது.

இந்தச் சூழலில் தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், சென்னையில் நேற்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில், 2025 ஆம் ஆண்டு நடக்க உள்ள உள்ளாட்சித் தேர்தல், அதற்கு அடுத்த ஆண்டு நடக்க உள்ள 2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலை மனதில் கொண்டுதான் கூட்டணி அமைக்க வேண்டும் என ஆலோசித் துள்ளனர்.

அந்த அடிப்படையில் பெரும்பான்மை மாவட்டச் செயலாளர் கள், பா.ஜ.கவுடன் கூட்டணி அமைப்பது கட்சியின் எதிர்காலத் துக்கு நல்லதல்ல என்றும், அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர் என கூறப்படுகிறது.

இதில் தென் மாவட்டச் செயலாளர்கள் ஒரே குரலில் விஜய காந்த் மகன் விஜய பிரபாகரனை மதுரையில் போட்டியிட வைக்க வேண்டும் எனவும் அதற்கு பிரேமலதாவும் பரிசீ லனை செய்கின்றேன் என உறுதியளித்ததால் கட்சியினர் உற்சாகமடைந்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.



# பாகிஸ்தானில் குண்டுவெடிப்புகள்: 26 பேர் உயிரிழப்பு, பலர் காயம்

பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் இன்று நடைபெற உள்ளது. இந்த நிலையில், நேற்று இடம்பெற்ற இரட்டை குண்டுவெடிப்பில் 26 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள பிஷின் என்ற நகரில் முதல் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. சுயேட்சை வேட்பாளர் அஸ்ஃபந்த்யார் காகர் என்வரின் தேர்தல் அலுவலகத்துக்கு வெளியே இந்த குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இதில், 14 பேர் உயிரிழந்துள்ளனர். 30 பேர் படுகாயமடைந்துள்ளனர் என பிஷின் நகர துணை பொலிஸ் ஆணையர் ஜும்மா தாத் கான் தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்கள் அனைவரும் அருகில் உள்ள கான்சாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

முதல் குண்டுவெடிப்பு நிகழ்ந்த சிறிது நேரத்துக்குள் இரண்டாவது குண்டுவெடிப்பு அதே பலுசிஸ்தான் மாகாணத்தின் கிலா ஃசைபுல்லா நகரில் இடம்பெற்றுள்ளது.

இந்த குண்டுவெடிப்பு கட்சி ஒன்றின் தேர்தல் அலுவலகத்துக்கு வெளியே இடம்பெற்றுள்ளது. இதில், 12 பேர் உயிரிழந்துள்ளனர் என கிலா ஃசைபுல்லா நகர துணை ஆணையர் யாசிர் பசாய் தெரிவித்துள்ளார்.

இந்த இரு குண்டுவெடிப்புகளுக்கும் இதுவரை எந்த ஒரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும், பாகிஸ்தான் தாலிபன், பலுசிஸ்தான் பிரிவினைவாத அமைப்புகள் ஆகியவை இந்த குண்டுவெடிப்பின் பின்னணியில் இருக்கக்கூடும் என கூறப்படுகிறது.

பாகிஸ்தான் நாடாளுமன்றமான தேசிய அவைக்கு இன்று தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் பிரச்சாரம் முடிவுக்கு வந்ததை அடுத்து, நேற்று பாகிஸ்தான் முழுவதும் அமைதியாக உள்ளது.

இந்நிலையில், இந்த இரட்டை குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது. இந்த குண்டுவெடிப்புக்கு இடைக்கால அரசின் உள்துறை அமைச்சர் கோஹர் இஜாஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



# இஸ்ரேலுடனான போரை 3 கட்டங்களாக நிறுத்துவதற்கு ஹமாஸ் வலியுறுத்துகிறது!

இஸ்ரேலுடனான போரை முடிவுக்கு கொண்டு வர, மூன்று கட்டங்களாக போர் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்று ஹமாஸ் வலியுறுத்தியுள்ளது என கூறப்படுகிறது.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போர் தொடர்ந்தும் நீடித்து வரும் நிலையில், உலக நாடுகள் போர் நிறுத்தம் தேவை என வலியுறுத்தி வருகின்றன.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் ஏற்பட கட்டார் முக்கிய மத்தியஸ்தராக செயல்பட்டு வருகிறது. போரை முடிவுக்கு கொண்டுவர கத்தார், அமெரிக்கா போன்ற நாடுகள் முயற்சி மேற்கொண்டும், இரு தரப்பும் சம்மதம் தெரிவிக்கவில்லை எனக் கூறப்பட்டுவந்தது.

முன்னதாக அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் சார்பில் மத்தியஸ்தம் செய்யும் வகையில், கட்டார், எகிப்து நாடுகள் நேரடியாக ஹமாஸ் அமைப்பினரை சந்தித்து பேசி வந்தனர். அந்த வகையில், கடந்த வாரம் நடந்த பேச்சுவார்த்தையில் சில விஷயங்கள் ஹமாஸ் அமைப்பினரிடம் வலியுறுத்தப்பட்டது.

அதோடு, நேற்று முன்தினம் இரவு இஸ்ரேல் சென்ற அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் அண்டனி பிளிங்கன், போர் குறித்து முக்கியமான விஷயங்களை ஆலோசித்தார் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், நேற்று ஹமாஸ் அமைப்பினர் தெரிவித்துள்ள பதிலில், ‘மூன்று கட்டங்களாக போர் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலாம்’ என்று முன்மொழிந்துள்ளனர் என கூறப்படுகிறது.

இஸ்ரேலுடனான போரை முடிவுக்கு கொண்டு வர 135 நாள்களுக்கு, 3 கட்டமாக போர் நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஹமாஸ் முன்மொழிந்துள்ளது. அதுவும் 45 நாள்கள் இடைவெளியில் மேற்கொள்ளலாம் எனக் குறிப்பிட்டுள்ளது.

முதல் கட்டத்தில், இஸ்ரேலிய சிறைகளில் இருந்து 1,500 பாலஸ்தீனிய பெண்கள், குழந்தைகள் விடுவிக்கப்பட வேண்டும். இதற்கு பதிலாக காசாவில் உள்ள பெண் பிணையக் கைதிகள், 19 வயதுக்கு உட்பட்டவர்கள், முதியவர்கள், உடல்நலம் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோர் விடுவிக்கப்படுவர். இரண்டாம் கட்டத்தில் மிஞ்சியிருக்கும் ஆண் பிணைக் கைதிகள் விடுவிக்கப்படுவர்.

மூன்றாம் கட்டத்திலும் பிணைக் கைதிகள் பரிமாற்றம் நடைபெற வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் இறுதியில் இருதரப்பும் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முன்வருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுதவிர இஸ்ரேல் படைகள் முழுவதுமாக வெளியேற வேண்டும். இறந்தவர்களின் உடல்களை சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஹமாஸ் அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். போர்நிறுத்தத்தின் போது, இஸ்ரேலியப் படைகள் முற்றிலுமாக வெளியேறும் நிலையில் காசாவின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய தாக்குதலால் காசாவின் 85 சதவீத மக்கள் உணவு, சுத்தமான நீர் மற்றும் மருந்து பற்றாக்குறைக்கு யால் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துள்ளனர். மேலும் மக்களின் உள்கட்டமைப்பு வசதிகள் சேதமடைந்துள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன என்று ஐ.நா சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராஜபக்ஷக்களையும் விட ரணிலின் ஆட்சியில் தமிழர் விரோத நடவடிக்கைகள் மிகத் தீவிரம்!

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறுகின்ற செயற்பாடுகளைப் பார்த்தால் அவை ராஜபக்ஷ காலத்தில் இடம்பெற்றவற்றை விட மிக மோசமாக அமைந்துள்ளன.

தமிழர் தேசத்தை இல்லாதொழிக்கின்ற – தமிழர் தேசத்தின் இருப்பை இல்லாமல் செய்கின்ற – செயற்பாடுகளில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் இறங்கி இருக்கின்றது.

பௌத்த மயமாக்களாக இருக்கலாம், சிங்களக் குடியேற்றங்களாக இருக்கலாம், தமிழருடைய நிலப்பரப்பில் அபிவிருத்தி என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்களை செய்வதாக இருக்கலாம், நகர அபிவிருத்தி என்ற பெயரில் தமிழர்களை வெளியேற்றுகிற செயல்பாடுகளாக இருக்கலாம் – எல்லாமே தாராளம்.

அதேநேரம் ஜனநாயக உரிமைகளை மறுத்து, தமிழர்களின் பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் போன்றவற்றை அவமதித்து, தமிழர்களின் அடிப்படை உரிமையாக இருக்கக்கூடிய நினைவு கூருவதற்கான உரிமை போன்ற அனைத்து விடயங்களையும் நசுக்கி, இன்று நிலைமைகள் மோசம் அடைந்து கொண்டு வருகின்றன.

அப்படிப்பட்ட ஒரு நிலையில் இலங்கையில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய பூகோளப் போட்டி நிலை காரணமாக சீனாவுடன் மேற்கு நாடுகள் போட்டி போடுகிற ஒரு நிலைமை உருவாகி இருக்கின்றது. தமிழர்களுடைய விவகாரங்கள் படுமோசமாக இருந்தும் கூட அந்த விடயங்களில் அக்கறை – கவனம் – செலுத்தாமல் சீனாவின் உடைய ஆதிக்கத்தைக் கட்டுபடுத்துகின்ற விடயங்களில் தமது அணுகுமுறையைக்கடைப்பிடிக்கின்ற கோணத்தில்தான் மேற்கு நாடுகள் பொதுவாக செயற்பட்டு கொண்டு வருகின்றன.

அந்த வகையில் அவர்கள் அனைவரும் அவர்களுடைய அரசாங்கத்திற்கு அழுத்தங்களைச் செலுத்தி இன்றைக்கு ஸ்ரீலங்காவின் பொருளாதார நெருக்கடிக்கு பாரிய நிதி உதவிகள் தேவைப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் அந்த உதவிகளை நிபந்தனைகளோடு செய்யும்படி வலியுறுத்தினோம். விசேஷமாக ஸ்ரீலங்கா அரசை மாற்றி அமைத்து, இனப் பிரச்சனைக்கு தமிழர்களின் சுயநிர்ணய அடிப்படையில் ஒரு தீர்வு பெற்றுக் கொள்வதற்கான அழுத்தங்களைச் செலுத்தி, அதே நேரம் பொறுப்பு கூறல் என்ற விடயத்தை ஒரு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக நடத்துவதற்குரிய அழுத்தங்களை தங்களுடைய அரசாங்கத்திற்கு கொடுத்து வலியுறுத்த பண்ண வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் முன்வைத்திருந்தோம்.

அத்தோடு தொடர்ந்தும் தமிழர்களுக்குரிய சுயநிர்ணய உரிமையை வலியுறுத்திய தீர்மானங்கள், இனப்படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணையை வலியுறுத்திய தீர்மானங்கள் என்பவற்றோடு, தமிழர்களின் அரசியல் தலைவிதியை அவர்களே தீர்மானிக்கக்கூடிய ஒரு சர்வஜன வாக்கெடுப்பையும் வலியுறுத்த வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கின்றோம். – என்றார்.

# பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவராக சந்திரிக்காவை நியமிப்பதற்குத் தீர்மானம்

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமைத்துவ சபையின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் யாப்பு மாற்றம் தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிறைவேற்றுக் குழு கூட்டத்தின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் திஸர குணசிங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கதிரை சின்னத்தில் பரந்த கூட்டணியுடன் எதிர்



வரும் பொதுத் தேர்தலில் களமிறங்கவுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் யாப்பு திருத்தத்தின் பிரகாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தலைமைத்துவ சபையில் 25 வீத பிரதிநிதித்துவமும் செயற்குழுவில் 50 வீத அதிகாரமும் கிடைக்கும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் புதிய உறுப்பினர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி தெரிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, கட்சியின் பொதுச் செயலாளராக புதிய உறுப்பினரொருவர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

# ஜனாதிபதி ரணிலுடன் எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை என்கின்றது மொட்டுக் கட்சி

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் வேட்பாளர் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இதுவரை எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் கட்சியுடன் கலந்துரையாட வேண்டுமெனக் கோரப்பட்ட போதிலும் ஜனாதிபதி அதற்கான திகதியை இதுவரை பெற்றுத்தரவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இதுவரையில் தீர்மானிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது கட்சியின் நிபந்தனைகளுக்கு இணங்கி செயற்படும் ஒருவருக்கு ஜனாதிபதி தேர்தலில் ஆதரவளிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.



# இந்தியா சென்றுள்ள அனுரகுமார குஜராத் முதல்வரைச் சந்தித்தார்

இந்தியா சென்றுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க உள்ளிட்ட குழுவினர் குஜராத் முதலமைச்சர் பூபேந்திரபாய் பட்டேலை நேற்றுச் சந்தித்துள்ளனர்.

குஜராத்தின் சட்டசபைக் கட்டடத் தொகுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

குஜராத் மாநிலத்தில் வறுமையை ஒழிப்பதற்கான அபிவிருத்தி மூலோபாய திட்டங்கள் மற்றும் பிராந்தியத்தின் நிர்வாக செயற்பாடுகள் ஆகிய விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அனுரகுமார திஸநாயக்க உள்ளிட்ட குழுவினர் குஜராத்தின் கைத்தொழில் அமைச்சருடனும் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்திய அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டுள்ள, குஜராத் மாதிரி திட்டத்தை இதன் போது முன்வைத்து கலந்துரையாடப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலுசக்தி மறுசீரமைப்பு, விவசாயம் மற்றும் நீர், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் முதலீடு, சுகாதார பாதுகாப்பு மற்றும் மகளிரை வலுப்படுத்துதல் ஆகியன குஜராத் மாதிரித் திட்டத்தின் பிரதான அம்சங்களாகும்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க உள்ளிட்ட குழுவினர் இந்தியாவின்உத்தியோகபூர்வ அழைப்பிற்கிணாங்க இந்த விஜயத்தில் ஈடுபட்டுள்ளனர்.



# மலையக மார்க்கத்தில் ரயில் சேவை பாதிப்பு

மலையக மார்க்கத்தில் ரயில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

பதுளையில் இருந்து கொழும்பு – கோட்டை நோக்கி பயணித்த ரயில் ஒன்று உலப்பனை ரயில் நிலையத்திற்கு அருகில் தடம்புரண்டுள்ளது.

இதனையடுத்து, மலையக மார்க்கத்தில் கொழும்பு கோட்டையிலிருந்து பயணிக்கும் ரயில்கள் நேற்று கம்பளை வரை மட்டுப்படுத்தப்பட்டன.

பதுளையில் இருந்து புறப்படும் ரயில்கள் நாவலப்பிட்டி வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.





# பஸ்களில் பெண்களுக்கு பாதுகாப்பு; சிவில் உடைகளில் பொலிஸ் சேவை

பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொள்பவர்களுக்கு எதிராக விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இந்த விசேட நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்திற் குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித் துள்ளார்.

இதற்கமைய இரகசியமான முறை யில் கெமரா பொருத்தப்பட்ட சிவில் உடை அணிந்த பொலிஸார் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அவர் தெரி வித்துள்ளார்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அத்துடன் பெண்களுக்குப் பொதுப் போக்குவரத்துகளில் இடையூறு ஏற்படுத் துவோர் தொடர்பில் அறிவிப்பதற்கு 109 எனும் அவசர இலக்கமும் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் பாவித்தவராம் பல்கலை மாணவனுக்குப் பிணை

போதைப்பொருள் பாவித்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட பல்கலைக் கழக மாணவனை மல்லாகம் நீதவான் நீதிமன்றம் நேற்றைய தினம் சரீரப் பிணையில் விடுவித்து உத்தரவிட்டது.

வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவனொருவர் வட்டுக்கோட்டை பொலிஸார் தன்னை தாக்கினர் எனத் தெரிவித்து மனித உரி மைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந் தியப் பணிமனையில் முறைப்பாடளித்து விட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார்.

இதன்போது அந்த நபர் போதைப் பொருள் பயன்படுத்தியமை யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் உறுதியாகியது.

இந்நிலையில் நேற்று முன்தினம் அந்த மாணவனைக் கைது செய்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் நேற்றைய தினம் அவ ரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் அந் நபரை பிணையில் விடு விக்க உத்தர விட்டார்.

பல்கலைக்கழக மாணவர் என்ற அடிப்படையில் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவரைப் புனர்வாழ்வு முகா முக்கு அனுப்பாது தொடர்ச்சியாக கண் காணிக்கவும், உளவள ஆலோசனைக் கும் சமூக சீர்திருத்த நன்னடத்தை பிரிவுக்கும் மல்லாகம் நீதிவான் எம். கே.முகமட் கில்மி உத்தரவிட்டார்.

# பண்டிகைக் காலத்தில் அரிசி நிவாரணம்

எதிர்வரும் பண்டிகை காலத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்க ளுக்கு தலா 20 கிலோகிராம் அரிசி நிவாரணமாக வழங்கப்படும் என ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் வைபவரீதியாக நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இதனை தொடர்ந்து நாடாளுமன்றத் தில் ஜனாதிபதி தமது அக்கிராசன உரையை முன்வைத்தார்.

அதில் கடந்த ஆண்டு காணப்பட்ட பொருளாதார நிலைமை, தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் அரசாங்கத்தின் எதிர்கால திட்டங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி விளக்கமளித்தார்.

அத்துடன், எதிர்வரும் பண்டிகை காலத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தலா 20 கிலோகிராம் அரிசி நிவாரணமாக வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# எதிர்க்கட்சிகளுடன் இணைந்து சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவோம்

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் எச்சரிக்கை



"சுதந்திரமான முறையில் தேர்தல் இடம்பெறுவதை தடுக்கும் வகையில் பாரதூரமான சட்டங்களை இயற்ற அரசாங்கம் முறையற்ற வகையில் செயற்படுகிறது. சகல எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடி சபாநாயகருக்கு எதிராக வெகுவிரைவில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவோம்."

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாட்டு மக்களின் மீது ஒட்டுமொத்த வரி சுமைகளையும் திணித்து விட்டு பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். புதிய நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்து கொள்கை பிரகடனம் உரையாற்றியுள்ளார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்த போது ஜனாதிபதி ஆற்றிய உரையில் குறிப்பிட்ட விடயங்கள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறான நிலையில் நான்காவது கூட்டத்தொடரை ஒத்திவைத்து ஐந்தாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து கடந்த ஆண்டு குறிப்பிட்ட விடயங்களையே தற்போதும் குறிப்பிட்டுள்ளார்.

நான்காவது கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டதால் நாடாளுமன்றத்தில் உள்ள 91 குழுக்களில் 64 குழுக்கள் கலைக்கப்பட்டுள்ளன.மீண்டும் புதிதாக குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும்.

ஆகவே ஜனாதிபதியின் செயற்பாடுகளினால் அரச நிதியும்,காலமும் வீண்விரயமாக்கப்பட்டுள்ளன. அரச நிதி மோசடி குறித்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆகவே ஊழல் மோசடிக்கு ஒத்தாசை வழங்கும் வகையில் ஜனாதிபதி செயற்பட்டுள்ளார். நாட்டில் சுதந்திரமான முறையில் தேர்தலை நடத்துவதற்கான சூழலை முடக்கும் வகையில் பாரதூரமான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

இணையவழி பாதுகாப்புச் சட்டத்தினால் நாட்டு மக்களின் பேச்சு உரிமை முடக்கப்பட்டுள்ளது. மறுபுறம் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரின் செயற்பாடுகள் முறையற்றவை. இவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். சகல எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடி சபாநாயகருக்கு எதிராக வெகுவிரைவில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவோம்." – என்றார்.

# சனத் நிஷாந்தவின் மரணத்தில் சந்தேகம் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முறைப்பாடு



முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மரணத்தை ஏற்படுத்திய வீதி விபத்து தொடர்பில் சந்தேகம் நிலவுதாகவும் அது தொடர்பில் விரிவான விசாரணைகளை கோரியும் அவரின் மனைவி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவி தற்போது தங்கியுள்ள இல்லத்திற்குச் சென்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் வாக்குமூலம் பெற்றுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்து இடம்பெற்ற விதம் மற்றும் சாரதியின் நடத்தைகள் தொடர்பிலும் சிக்கல் நிலை காணப்படுவதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவி குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, தமது கணவரின் மரணம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையின் 11 ஆவது கிலோ மீற்றர் தூணுக்கு அருகில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயணித்த ஜீப் ரக வாகனம் முன்னால் சென்ற கொள்கலன் ஊர்தி ஒன்றுடன் மோதி கடந்த மாதம் 25 ஆம் திகதி அதிகாலை விபத்துக்குள்ளாகியது.

பின்னர் இந்த விபத்து தொடர்பில் முன்னாள் அமைச்சர் சனத் நிஷாந்தவின் சாரதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த விபத்துக்கு முன்னதாக வாட்ஸ்அப் செயலியின் ஊடாக பதிவிட்டிருந்த மரணம் தொடர்பான குறிப்பு தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பௌத்த தர்மத்தை திரிபுப்படுத்திய அவலோகிதேஸ்வரவிற்குப் பிணை

பௌத்த தர்மத்தை திரிவுபடுத்தில் போதனை செய்தார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள அவலோகிதேஸ்வர என்ற மஹிந்த கொடிதுவக்கு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் அவர் நேற்று பிரசன்னப்படுத்தப்பட்டார்.

இதன்போது, ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் அவரை விடுவிக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அவலோகிதேஸ்வர என்ற மஹிந்த கொடிதுவக்கு, உளநல பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார் எனவும், அவரை ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் அங்கொடை தேசிய மனநல நிறுவகத்துக்கு சென்று சிகிச்சைகளை பெறவேண்டும் எனவும் நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணை பிரிவின் அதிகாரிகளால் கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் திகதி பன்னிபிட்டிய பகுதியில் வைத்து இவர் கைது செய்யப்பட்டார்.

# ஜனாதிபதியின் ஆசீர்வாதத்துடன் அனுரகுமார இந்தியா சென்றார்

## நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

"ஜனாதிபதியின் முழுமையான ஆசீர்வாதத்துடன் தான் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்குச் சென்றுள்ளார். இந்திய எதிர்ப்பு கொள்கையிலிருந்து விடுபட்டுள்ளமை வரவேற்கத்தக்கது."

– இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ்ச் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க உட்பட அவரது குழுவினர் ஜனாதிபதியின் முழுமையான ஆசீர்வாதத்துடன்தான் இந்தியாவுக்கு அரசமுறை பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள். இவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் வழங்குமாறு இந்தியாவில் உள்ள



இலங்கை உயர்ஸ்தானிகருக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம்.

இந்திய உருளைக் கிழங்குகளை இலங்கையில் விற்பனை செய்தவர்களைக் கொலை செய்ய வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியினர் கடந்த காலங்களில் பிரசாரங்களை முன்னெடுத்தனர். இந்திய எதிர்ப்பு கொள்கைகளைத் தொடர்ந்து 60 ஆயிரம் பேர் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டது. நாடும் பாரிய விளைவுகளை எதிர்கொண்டது.

மக்கள் விடுதலை முன்னணியினர் இந்திய எதிர்ப்பு கொள்கையிலிருந்து விடுபட்டு நடைமுறைக்கு ஏற்றால் போல் செயற்பட முனைவது வரவேற்கத்தக்கது. மக்கள் விடுதலை முன்னணியின் மாற்றம் மகிழ்வுக்குரியது." – என்றார்.



# லக்விஜய அனல் மின் நிலையத்தின் ஊழியர்கள் நேற்று ஆரப்பாட்டம்!

(ரஸீன் ரஸ்மின்)

பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து புத்தளம்–நுரைச்சோலை லக்விஜய அனல் மின் நிலைய ஊழியர்கள் நேற்று நண்பகல் ஆரப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சில காரணங்களை முன்வைத்து சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட ஊழியர்களை மீண்டும் இணைத்துக் கொள்ளவும், மின்சார சபைக்கு சொந்தமான சில வளங்களை தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே மேற்படி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, நுரைச்சோலை பொலிஸார் அங்கு பாதுகாப்புக் கடமையிலும் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை, திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை அனைத்து மின்சார சபை அலுவலகங்களுக்கு முன்னால் கறுப்புக் கொடிகளை பறக்க விடுமாறும், ஊழியர்கள் அனைவரும் கறுப்பு பட்டிகளை அணியுமாறும் இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் கோரிக்கைகளை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.















### வவுனியாவில் நேற்று நடவடிக்கை

# சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 4 கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் அழிப்பு

**(வசந்தன்)**

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட் 4 கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் வவுனியாவில் நீதிபதி முன்னிலையில் அழிக்கப்பட்டன.

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படவிருந்த அரிசி, மஞ்சள், கொத்தமல்லி, நிலக்கடலை, உட்பட 7 ஆயிரம் கிலோகிராம் உணவுப்பொருள்களும், சட்டவிரோத கிருமிநாசினிகளுமே இவ்வாறு அழிக்கப்பட்டன.

இந்தப் பொருள்கள் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச எல்லைப்பகுதியில் வைத்து சுகாதார பரிசோதகர்களால் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றில் பாரப்படுப்பத்தப்பட்டிருந்தன. அவற்றை உடைமையில் வைத்திருந்த நபர்களுக்கு ஒன்றரை லட்சம் ரூபா தண்டப்பணம் நீதிமன்றால் விதிக்கப்பட்டது.

இந்நிலையில் வவுனியா பம்பைமடுப்பகுதியில் வைத்து மேலதிக நீதவான் ஜெ.சுபாஜினி, சிங்கள பிரதேச சபை செயலாளர் விமலவேணி நிசங்க, சுகாதார பரி சோதகர்கள் முன்னிலையில் இந்தப் பொருள்கள் அழிக் கப்பட்டன.













# இன்றைய ராசி பலன்கள் - 08.02.2024




இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிரம்பி காணப்படும். எனவே எந்த விஷயத்தையும் நீங்கள் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் அதிக பொறுப்புகள் காணப்படும். பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது உங்கள் ஆர்வத்தை மேம்படுத்த உதவும்.

நீங்கள் உங்கள் உறவில் உள்ள பிரச்சினையை தீர்ப்பதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் துணையிடம் இது பற்றி பேசுவீர்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைவு. உங்கள் செலவுகளை கண்காணிக்கவும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் காணப்படுவீர்கள்.பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களின் நட்பு பட்டியலில் கூடுதல் நண்பர்கள் இடம் பெறுவார்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் தொடர்பாடல் திறன் உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை மேம்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிறப்பாக வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் அணுகு முறையில் நம்பிக்கை காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் திறமையை பயன்படுத்தி நன்மை அடைவீர்கள் மற்றும் இலக்குகளை குறித்தநேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தை செலவிடுவீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழும் வாய்ப்பு உள்ளது.

சிறு கடன் வகையில் இன்று பண வரவு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதிய அளவு பணம் காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் மற்றும் திடகாத்திரம் பராமரிப்பீர்கள்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண போராட வேண்டும். தியானம் அல்லது யோகா பயில்வதன் மூலம் பதட்டத்தை சமாளிக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும்.பதட்டத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் தவறு காண்பீர்கள்.இதனால் விரோதம் விளையும். இதனை சமாளிக்க முயல வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையை சமாளிக்க நீங்கள் கண்டிப்பான திட்டம் மேற்கொள்ள வேண்டும்.

சளி மற்றும் தலை வலி காரணமாக உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




எதிர்மறை எண்ணங்கள் உங்கள் நம்பிக்கையை குலைக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வை மேற்கொள்ள வேண்டும்.

மந்தமான சூழ்நிலை காணப்படும். உங்கள் செயல்திறன் மூலம் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்கள் துணையின் நடத்தை உங்களை உணர்ச்சிவசப்பட வைக்கும். இது குடும்ப சூழ்நிலையின் மகிழ்ச்சியை குறைக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அது மகிழ்ச்சிகரமாக இருக்கது. உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும். நிதிநிலையில் ஏற்றத்தாழ்வுகளை சந்திப்பீர்கள்.

பதற்றமும் பேரார்வமும் ஆரோக்கியத்துக்கு உகந்தது அல்ல. இத்தகைய உணர்வுகளை சமாளியுங்கள்.




நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிகையை வளர்த்துக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். அதிக வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுமுறையில் உற்சாகம் காணப்படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சுமூகமாக இருக்கும். இன்று அதிக பண வரவு காணும் நிலையில் இருப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்த விதமான பெரிய பிரச்சினையும் இருக்காது.




உங்கள் செயல்களை கண்காணிக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் போராட வேண்டும். சூழ்நிலையை பொறுமையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

சக பணியாளர்களுடன் பயணம் மேற்கொள்வீர்கள். உங்கள் கீழ் பணி புரிபவர்களிடம் கவனமாக இருங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு இல்லாததே இதற்குக் காரணம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. நீங்கள் அதிகம் செலவு செய்வீர்கள். இதனால் பணப் பிரச்சினை உருவாகும். பதற்றம் காரணமாக தலை வலி ஏற்படும். தியானம் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு உகந்த நாளாக இருக்காது.இன்றைய நாள் சுமூகமாக இருக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணியிடத்தில் கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். உங்கள் பணிகளை திறமையான முறையில் ஆற்ற நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

அகந்தைப் போக்கு காரணமாக உறவில் இணக்கமின்மை காணப்படும்.எனவே இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

தலைவலி மற்றும் முதுகுவலியால் நீங்கள் பாதிக்கப்படலாம். எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள் - 08.02.2024

## தனுசு

இன்று சிந்தனை மிகுந்த நாளாக இருக்கும். எனவே உங்கள் இலக்குகளை திட்டமிட்டு மேற்கொள்வது நல்லது.

இன்று பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும்.நீங்கள் பணியில் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.

நீங்கள் தலை வலியால் பாதிக்கப்படலாம். ஓய்விற்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

## கும்பம்

உங்கள் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் மூலம் நீங்கள் நன்மை அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாக உறவாடுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பண வரவு காணப்படும்.

நம்பிக்கையான எண்ணம் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.

## மகரம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படும். சுய முயற்சி மூலம் உங்கள் கடின உழைப்பிற்கு பலன் பெறுவீர்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்புக்குப் பாராட்டு கிடைக்கும்.

காதலர்களிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் இருவரும் உறவில் கடந்த கால வேறுபாடுகளை மறந்து உறவை புதுப்பிக்கலாம்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மீனம்

உங்கள் விருப்பங்களை எளிதில் அடைவதற்கு இது சாதகமான நாள். கடினமான சூழ்நிலையை எதிர் கொள்ளும் தைரியம் உங்களிடம் காணப்படும்.

பணியில் நற்பெயர் எடுப்பதற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் திறமைகளை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை நிலை உயரும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் மகிழ்ச்சியும் பராமரிக்க இயலும்.

இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




